ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2316/33 – 2023 ජනවාරි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා – 2023.01.26
2316/33 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013.07.02 ஆம் திகதிய 1817/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 212 ஆம் இலக்க 2013.06.26 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது கீழே விபரிக்கப்பட்ட காணித் துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்பட வில்லை ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2013.07.02 ஆம் திகதிய 1817/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 212 ஆம் இலக்க 2013.06.26 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/15/2011/VE/326.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : நா/ஒ/1/அத்/2009/1.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, சனவரி 17.


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*01.* **துண்டு இல.** *12* **- கீனகெலே வத்தை** *3x6* **பகுதி - விஸ்தீரணம் : 0.0491 ஹெக்டயார்**

வடக்கு : ஆர். ஜே. பிரனாந்து மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் கினகெலே வத்தை 3x6 பகுதி (உ.வ. 50324); கிழக்கு: ஆர். ஜே. பிரனாந்து மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் கினகெலே வத்தை 3x6 பகுதி (உ.வ. 50324); தெற்கு: துண்டு இல. 16; மேற்கு: துண்டு இல. 13 மற்றும் 11.

EOG 01-0240.

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39(அ)(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007, சனவரி மாதம் 29 ஆந் திகதிய 1482/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட ) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் , சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் I ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. LD/05/2006/VE/499.
பிரதேச செயலாளர் இல. : DIK/LAN/02/01.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, சனவரி 17.

**அட்டவணை I**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லபட பற்று சிறு பிரிவில், திக்வெல்ல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.02.21 ஆம் திகதிய MR/DKW/2018/292 ஆம் இலக்க முதல் சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லை :

*01.* **துண்டு 'N'- அலவத்தஹேனவத்தை அல்லது கிரேசிலேன் புஞ்சி அளவு - விஸ்தீரணம் : சுமார் 0.0077 ஹெக்டயார்**

வடக்கு: MR/DKW/2018/292 இன் வரைபடத்தில் Q, P மற்றும் R எழுத்துக்களைக் கொண்ட துண்டு; கிழக்கு: MR/DKW/2018/292 இன் வரைபடத்தில் P, R மற்றும் T எழுத்துக்ளைக் கொண்ட துண்டு மற்றும் ஆ. வ.மாற 2503 இல் துண்டு இல. 2; தெற்கு: ஆ. வ.மாற 2503 இல் துண்டு இல. 2 மற்றும் MR/DKW/2018/292 இன் வரைபடத்தில் B எழுத்துக்களைக் கொண்ட துண்டு; மேற்கு: MR/DKW/2018/292 இன் வரைபடத்தில் B மற்றும் A எழுத்துக்ளைக் கொண்ட துண்டு.

EOG 01-0241.